பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*13 01 2026* *12 40*
செவ்வாய்கிழமை நண்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிப்பது அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. நடப்பாண்டு இறுதிக்குள் நாட்டின் செல்போன் உற்பத்தி, 75 பில்லியன் டாலரை எட்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. உலக நன்மைக்காக பிரிக்ஸ் நாடுகளின் திறமையை ஒருங்கிணைந்து பயன்படுத்த இந்தியா பாடுபடும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. அறுவடைத் திருநாள் வட மாநிலங்களில் இன்று *Lohri* பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

5. ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிப்பது அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

தில்லி பல்கலைக் கழக நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், இப்பல்கலைக் கழகத்தை போதைப்பொருள் பயன்பாடு இல்லாத வளாகமாக மாற்றும் முயற்சிகள் போதைப்பொருள் இல்லாத இந்தியா என்ற மத்திய அரசின் திட்டத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது என்று கூறினார்.

போதைப்பொருள் பயன்பாடு சமூகத்தில் ஒரு பெரும் சவாலாக இருப்பதுடன், மனித உயிருக்கே பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே நாட்டுமக்கள் அனைவரும் போதைப்பொருள் ஒழிப்பிற்கு பங்காற்றுவதுடன், இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வருமாறும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

>>><><><><<<

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் பலனாக நடப்பாண்டு இறுதிக்குள் நாட்டின் செல்போன் உற்பத்தி, 75 பில்லியன் டாலரை எட்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆங்கில நாளிதழில் வெளியான கட்டுரை ஒன்றை பகிர்ந்துள்ளனர்.

அதில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் காரணமாக செல்போன் ஏற்றுமதி 30 பில்லியன் டாலரை தாண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டித்தன்மையின் அடுத்தக்கட்டத்தை மதிப்பிடுவதற்கு இத்திட்டம் வழிவகுத்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>><><><><<<

லட்சத்தீவு யூனியன் பிரதேசத்தில் உள்ள கவரட்டியில் முப்படைகள் சார்பில் நடத்தப்படும் உயர் சிறப்பு மருத்துவ முகாமை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய கடற்படை சார்பில் நடத்தப்படும் இந்த மருத்துவ முகாம், தொலை தூரங்களில் உள்ள மக்களுக்கும், தரமான மருத்துவ சேவைகள் வழங்குவது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க இதுபோன்ற மருத்துவ முகாம்கள் உதவிகரமாக அமையும் என்றும் அவர் கூறினார்.

விரிவான மருத்துவ பரிசோதனைகள், உரிய நேரத்தில் தேவையான மருத்துவ ஆலோசனைகள், சிகிச்சை மற்றும் மருந்துப் பொருட்களை இலவசமாக வழங்குவது, லட்சத்தீவு யூனியன் பிரதேச மக்களின் நீண்டகால ஆரோக்கியத்திற்கு வகை செய்யும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>><><><><<<

உலக நன்மைக்காக பிரிக்ஸ் நாடுகளின் திறமையை ஒருங்கிணைந்து பயன்படுத்த இந்தியா பாடுபடும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கான இலட்சினையை வெளியிட்டு அவர் பேசினார்.

இந்த இலட்சினையில் பிரிக்ஸ் நாடுகளின் தேசிய கொடிகளில் இடம்பெற்றுள்ள வண்ணங்கள் வேற்றுமையில் ஒற்றுமையை பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பிரிக்ஸ் அமைப்பு அதன் உறுப்பு நாடுகளின் தனித்துவ அடையாளங்களை போற்றுவதுடன் கூட்டு முயற்சியின் வலிமையையும் உணர்த்துவதாக அவர் கூறினார்.

உச்சிமாநாட்டின் மையக் கருத்து, திறமையை மேம்படுத்தி புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிக்கும் என்றும், அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலான நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் அமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள வேளையில், அதற்கான இணைய தளத்தையும் திரு ஜெய்சங்கர் தொடங்கி வைத்தார்.

>>><><><><<<

மின்னணு சாதன உற்பத்தியை அதிகரிக்க அரிய வகை தாதுக்களின் விநியோக சங்கிலியை வலுப்படுத்துவது அவசியம் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறும் அரிய தாதுக்கள் குறித்த மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், மின்னணு சாதன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த மாநாடு மிகுந்த பயனளிக்கும் என்று குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் தாதுக்களை சுத்திகரிப்பது குறித்த நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், காந்தம் உள்ளிட்டவை நீண்டகாலத்திற்கு கிடைக்கச் செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>><><><><<<

அறுவடைத் திருநாள் வட மாநிலங்களில் இன்று லோரி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம் மற்றும் ஜம்மு கஷ்மீரைச் சேர்ந்த மக்கள் விளைபொருட்களை படைத்து சாகுபடிக்கு உதவிய இயற்கையை போற்றும் வகையில் இந்நாளை கொண்டாடி வருகின்றனர்.

இதையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், உற்சாகம், எழுச்சி மற்றும் புத்துணர்வின் அடையாளமாக திகழும் லோரி பண்டிகை மக்களுக்கு மகிழ்ச்சி மற்றும் செல்வத்தை வழங்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>><><><><<<

நாட்டின் இளையோர் சக்தி வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடலின் நிறைவு விழா குறித்த காணொலியை தமது சமூக வலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற இளம் தலைவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கான தங்களது எண்ணங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் பகிர்ந்து கொண்டதையும் டாக்டர் மன்சுக் மாண்டவியா சுட்டிக்காட்டியுள்ளார்.

>>><><><><<<

ஜெர்மன் பிரதமர் திரு Friedrich Merz அகமதாபாதில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு இன்று பெங்களூர் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை கர்நாடகா தொழில் துறை அமைச்சர் திரு M B Patil உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பெங்களூருவில் செயல்பட்டு வரும் ஜெர்மன் நாட்டின் *Bosch* நிறுவன வளாகத்தை பார்வையிடும் திரு *Friedrich Merz* பின்னர் இந்திய அறிவியல் கழக வளாகத்தில் இயங்கி வரும் நானோ அறிவியல் மற்றும் பொறியியல் மையத்தையும் பார்வையிடவுள்ளார்.

>>><><><><<<

பங்களாதேஷில் இருந்து சட்டவிரோதமாக குடியேறுவோர் குறித்த விசாரணையை தேசிய புலனாய்வு முகமை தொடங்கியுள்ளது.

இதுவரை தில்லி காவல்துறையின் சிறப்பு பிரிவினர் மேற்கொண்டு வந்த விசாரணையை, தேசிய புலனாய்வு முகமை ஏற்றதை அடுத்து, புதிதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, விசாரணை வரம்புகளை அதிகரித்து, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் அதன் மூலம் நடைபெறும் பணப் பரிவர்த்தனை குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் திட்டமிட்ட கட்டமைப்பு வாயிலாக பங்களாதேஷ் நாட்டவர் இந்தியாவுக்குள் குடியேற்றம் செய்யப்படுவது உள்ளிட்ட ஆதாரங்கள் கிடைத்ததை அடுத்து இந்த வழக்கு விசாரணையை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றி மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டிருந்தது.

>>><><><><<<

இமாச்சலப்பிரதேசத்தில் நேற்று நிகழ்ந்த தீவிபத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் நான்கு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேரை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சோலான் மாவட்டத்திற்கு உட்பட்ட *Arki* எனும் இடத்தில் நேரிட்ட இந்த விபத்தில் உயிரிழந்த அனைவரும் நேபாளத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

>>><><><><<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், ஊதிய முரண்பாடு குறைப்புப் படி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்நாட்டின் பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களில் வழங்கப்படுவது போல தங்களுக்கும் 30 சதவீத ஊதிய முரண்பாடு குறைப்புப் படி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டக்காரர்கள் சாலைகளில் தடுப்புகளை ஏற்படுத்தி, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட அரசு கல்லூரி பேராசிரியர்கள் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாகவும் பலுசிஸ்தான் அரசு ஊழியர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

>>><><><><<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 69 கிலோ எடைப்பிரிவில் ரேகா சௌதிரி தங்கப்பதக்கம் வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவில் Suchika Tariyal -லும் ஆடவர் 77 கிலோ எடைப்பிரிவில் வருண் சன்யாலும், 56 கிலோ எடைப்பிரிவில் பிரவீன் குப்தாவும், 71 கிலோ எடைப்பிரிவில் கணேஷ் ராஜூம் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

>>><><><><<<

இந்திய ஒபன் பேட்மிண்டன் போட்டி இன்று புதுதில்லியில் தொடங்கியது.

>>><><><><<<

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ஆர்யன் லக்ஷ்மணன், தேவ் ஜாவ்யா, உதித் காம்போஜ், அபினவ் சஞ்சீவ் ஆகியோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.